Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com

தினசரி காலை நாளிதழ்

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழன், டிசம்பர் 19, 2024 | இதழ் 250

# ஓய்வு அறிவித்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சி கிரிக்கெட்டில் எனது பயணம் தொடரும்: சென்னை திரும்பிய அஸ்வின் பேட்டி

சென்னை, 19 டிசம்பர் 2024: ஓய்வு அறிவித்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சிதான், கிரிக்கெட்டில் எனது பயணம் தொடரும் என்று சென்னை விமான நிலையத்தில் அஸ்வின் கூறினார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான தமிழகத்தை சேர்ந்த ஆர். அஸ்வின் ஆஸ்திரேலியாவில் நடந்து வரும் பார்டர்-கவாஸ்கர் கோப்பைக்கான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியில் அங்கம் வகித்தார். 3வது டெஸ்ட் போட்டி முடிந்த நிலையில் ரவிச்சந்திரன் அஸ்வின் சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக நேற்று திடீரென அறிவித்தார். இதன் மூலம் அவரது 14 ஆண்டு கால சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வந்தது. அவருக்கு கிரிக்கெட் வீரர்கள் பலரும் சமூக வலைதளம் மூலம் புகழாரம் சூட்டினர்.

இந்த நிலையில், ரவிச்சந்திரன் அஸ்வின் ஆஸ்திரேலியாவில் இருந்து சிங்கப்பூர் வழியாக இன்று காலை சென்னை வந்தடைந்தார். சென்னை விமான நிலையத்தில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அங்கிருந்து காரில் வீட்டிற்கு சென்ற அஸ்வினை அவரது தந்தை, தாய் மற்றும் குடும்பத்தினர் கட்டியணைத்து, முத்தமிட்டு வரவேற்றனர்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் அஸ்வின் கூறியதாவது:-

இவ்வளவு பேர் வருவீர்கள் என்று நான் எதிர்பார்க்க வில்லை. நான் வந்து அப்படியே வீட்டில் போய் உட்கார்ந்து கொள்ளலாம் என்று நினைத்தேன். என்னை வரவேற்க வந்த அனைவருக்கும் நன்றி. 3வது டெஸ்ட்டின் 4ம் நாளில் ஓய்வு முடிவை எடுத்தேன். கடந்த காலங்களில் இரவு தூங்கும் போது விளையாடிய போட்டிகளில் விக்கெட் வீழ்த்தியது, ரன்கள் அடித்தது எல்லாம் ஞாபகம் வரும். ஆனால் கடந்த 2 ஆண்டுகளாக அப்படி ஒன்று ஞாபகம் வரவில்லை. அதுவே ஒரு தெளிவான அறிகுறி; நாம் இனி அடுத்த பாதைக்கு செல்ல வேண்டும் என நினைத்தேன். ஒய்வு அறிவித்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சி தான்.




அடுத்த பயணத்தை இனி தொடங்க வேண்டும். இனி சிறிது நாட்களுக்கு எதுவும் செய்யாமல் சும்மா இருக்க வேண்டும்; சும்மா இருப்பது கடினம் தான். கிரிக்கெட்டில் எனது பயணம் தொடர்ந்து இருக்கும். அடுத்த பயணத்தை இனிதாக தொடங்க வேண்டும். கிரிக்கெட் வீரர் அஸ்வின் முடிந்துவிட்டார் என்று நான் நினைக்கவில்லை. இந்திய கிரிக்கெட் வீரர் அஸ்வின் முடிந்துவிட்டார் என்று தான் நினைக்கிறேன். சி.எஸ்.கே., அணிக்காக என்னால் முடிந்த வரை விளையாடுவேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

ஒய்வு அறிவித்த அஸ்வினுக்கு கிரிக்கெட் வீரர்கள் பலரும் சமூக வலைதளம் மூலம் புகழாரம் சூட்டியுள்ளனர்.

அஸ்வின், கிரிக்கெட் விளையாட்டில் உங்களது அணுகுமுறையை பார்த்து நான் எப்போதும் பிரமித்து இருக்கிறேன். ‘கேரம்’ வகை பந்து வீசுவதில் இருந்து அணிக்கு தேவையான முக்கியமான ரன்களை அடிப்பது வரை நீங்கள் எப்போதும் வெற்றிக்கான வழிமுறையை கண்டறிந்து கொண்டிருப்பீர்கள். திறமையான இளம் பந்து வீச்சாளர் என்ற நிலையில் இருந்து இந்திய அணியின் மேட்ச் வின்னர் வரை கிரிக்கெட் களத்தில் உங்கள் வளர்ச்சியை பார்த்தது அற்புதமானது. உண்மையான ஒரு சிறந்த வீரர் எதற்கும் அஞ்சாமல் பரிசோதனை முயற்சிகளை மேற்கொள்வார் என்பதை உங்களது பயணம் காட்டுகிறது. உங்களது கிரிக்கெட் பயணம் ஒவ்வொருவருக்கும் உத்வேகம் அளிக்கும். உங்களுடைய 2-வது இன்னிங்ஸ் சிறப்பாக அமைய வாழ்த்துகள் என்று கூறியுள்ளார்.

நான் உங்களுடன் 14 ஆண்டுகள் இணைந்து விளையாடி இருக்கிறேன். ஓய்வு பெறப்போவதாக நீங்கள் என்னிடம் கூறியது என்னை உணர்ச்சிவசப்பட வைத்தது. நாம் ஒன்றாக விளையாடிய நாட்கள் கண் முன் வந்து நின்றன. உங்களுடனான இந்த பயணத்தின் ஒவ்வொரு பகுதியையும் நான் ரசித்தேன். உங்களது திறமை மற்றும் இந்திய அணியின் வெற்றிக்கு அளித்த பங்களிப்புக்கு நிகர் எதுவுமில்லை. நீங்கள் எப்போதும் இந்திய கிரிக்கெட்டில் ஒரு ஜாம்பவனாக நினைவில் கொள்ளப்படுவீர்கள் என்று கூறியுள்ளார்.

இதே போல் பல்வேறு முன்னாள் மற்றும் தற்போதைய கிரிக்கெட் வீரர்களுக்கும் அஸ்வினுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

# அமித் ஷா பதவி விலக நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் போராட்டம் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்த ராகுலை தடுத்து நிறுத்திய பாஜக எம்.பி.க்கள் மோதலில் பாஜக எம்.பி. மண்டை உடைந்தது

சென்னை, 19 டிசம்பர் 2024: அம்பேத்கர் பற்றிய அமித் ஷாவின் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ் மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகளும், அமித் ஷா கருத்தை எதிர்க்கட்சிகள் திரித்து சர்ச்சை ஆக்குவதாக கூறி பாஜகவும் இன்று காலை நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டன.

இதனால் நாடாளுமன்ற வளாகத்தில் பெரும் பரபரப்பு நிலவியது. மேலும் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்த ராகுலை பாஜக எம்.பி.க்கள் தடுத்து நிறுத்தியதால் இருதரப்பினர் இடையே மோதல் ஏற்பட்டது.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை விவாதம் நடைபெற்றது. விவாதத்தின் முடிவில் மத்திய அமைச்சர் அமித் ஷா பேசும்போது, ‘அம்பேத்கர்... அம்பேத்கர்...’ என முழக்கமிடுவது இப்போது பேஷன் ஆகிவிட்டது. இதற்கு பதிலாக கடவுளின் பெயரை இவ்வளவு முறை உச்சரித்திருந்தால், சொர்க்கத்தில் அவர்களுக்கு இடம் கிடைத்திருக்கும். அம்பேத்கரின் பெயரை காங்கிரஸ் உச்சரிப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. ஆனால் அவர் மீதான உண்மையான உணர்வுகள் குறித்தும் காங்கிரஸ் பேச வேண்டும்” எனப் பேசினார்.




மாநிலங்களவையில் அம்பேத்கரை அவமதிக்கும் கருத்துகளை அமித் ஷா தெரிவித்ததாக குற்றச்சாட்டை எழுப்பியுள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் தங்களது கண்டனத்தை தெரிவித்தனர். அமித்ஷா பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணியை சேர்ந்த எதிர்க்கட்சியினர் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால் நேற்று நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில், நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள அம்பேத்கர் சிலை முன்பு ராகுல் காந்தி தலைமையில் எதிர்க்கட்சி எம்பிக்கள் தொடர்ந்து 2வது நாளாக அமித் ஷாவை கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ராகுல், பிரியங்கா, மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்டோர் பங்கேற்று அமித் ஷாவுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். எதிர்க்கட்சி எம்பிக்கள் நீல நிற ஆடை அணிந்து, அம்பேதகர் சிலையில் இருந்து மகர் திவார் வரை பேரணியாகச் சென்றனர். பேரணி மகா திவாரை அடைந்தவுடன் நுழைவு வாயில் சுவரின் மீது ஏறி சில எம்பிக்கள் அமித் ஷாவுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பியதால் பரபரப்பு ஏற்பட்டது. பேரணியாக வந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளில் பங்கேற்க உள்ளே செல்ல முயன்றனர்.

அப்போது, நுழைவு வாயிலில் அம்பேத்கரை காங்கிரஸ் தொடர்ந்து அவமதித்து வருவதற்கு கண்டனம் தெரிவித்து பாஜக எம்பிக்கள் போட்டி போராட்டம் நடத்தினர்.

இது தள்ளுமுள்ளாக மாறிய நிலையில், பாஜக எம்பி பிரதாப் சந்திர சாரங்கி கீழே விழுந்ததில் தலையில் லேசான காயம் ஏற்பட்டது. உடனடியாக அவரை மீட்ட சக உறுப்பினர்கள் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அப்போது ராகுல் தள்ளிய ஒரு எம்பி தன் மீது விழுந்ததால் தனக்கு காயம் ஏற்பட்டதாக பிரதார் சந்திர சாரங்கி தெரிவித்தார்.

இந்த சம்பவம் குறித்து ராகுல் காந்தி கூறியதாவது:

” உங்கள் கேமிராக்களிலேயே இந்த சம்பவம் பதிவாகியிருக்கும். நான் நாடாளுமன்ற வாயில் வழியாக உள்ளே செல்ல முயன்றேன். அப்போது, பாஜக எம்பிக்கள் என்னை வழிமறித்து தள்ளினார்கள், மிரட்டல் விடுத்தார்கள். அதனால்தான் இது நடந்தது.

தள்ளுமுள்ளு நடந்தது உண்மைதான். இந்த சலசலப்புக்கு எல்லாம் நாங்கள் பயப்பட மாட்டோம். ஆனால், இது நுழைவு வாயில், உள்ளே செல்ல எங்களுக்கு உரிமை உண்டு. அரசியலமைப்பை தாக்குவதும் அம்பேத்கரை அவமதிப்பதுமே முக்கிய பிரச்னை” என்றார்.

நாடாளுமன்ற வளாகத்தில் திரண்ட பாஜக எம்.பி.க்கள், ‘பாபா சாஹேப் அம்பேத்கர் நமக்கு வழிகாட்டினார். ஆனால் காங்கிரஸ் தவறான பாதையில் இட்டுச்சென்றது’ என்ற பதாகைகளை ஏந்தியபடி காங்கிரசை குற்றஞ்சாட்டினர்.

இது குறித்து மத்திய அமைச்சர் கிரிராஜ் சிங் கூறுகையில், “காங்கிரஸ் குடும்பத்தினர் தங்களுக்கு பாரத ரத்னா விருது வழங்கிக் கொண்டனர். ஆனால் அம்பேத்கருக்கு அவர்கள் வழங்கவில்லை. அமித் ஷா பேச்சை காங்கிரஸ் திரித்துப் பேசுகிறது. அம்பேத்கருக்கு பாரத் ரத்னா விருது வழங்கியது பாஜக அரசு தான். அமித் ஷா பேச்சை அரசியலாக்கி அதன்மூலம் பலன் அடையும் முயற்சியில் காங்கிரஸ் இறங்கி உள்ளது” என்றார்.



இந்நிலையில், இன்று காலை 11 மணி அளவில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் தொடங்கின. அப்போது, மத்திய அமைச்சர் அமித்ஷா மன்னிப்பு கேட்பதுடன் தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என எதிர்க்கட்சிகள் மீண்டும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

மேலும், மக்களவையில், “ஜெய் பீம், ஜெய் பீம்” என்று எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அவையில் முழக்கமிட்டனர். மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அமளியில் ஈடுபட்டனர். அப்போது அவையில், மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் தேசியத் தலைவருமான மல்லிகார்ஜுன கார்கே, அம்பேத்கரின் புகைப்படத்தை எடுத்து உயர்த்திக் காட்டினார்.

இதனால், மக்களவை மதியம் 2 மணி வரை ஒத்திவைக்கப்படுவதாக அவைத் தலைவர் ஓம் பிர்லா அறிவித்தார். இதனை தொடர்ந்து, எதிர்க்கட்சிகளின் அமளியால் மாநிலங்களவையும் முடங்கியது. இதனால், அவையை அதன் தலைவர் ஜெகதீப் தன்கர் மதியம் 2 மணி வரை ஒத்திவைப்பதாக அறிவித்தார்.

இந்த நிலையில் அமித்ஷாவுக்கு எதிராக மாநிலங்களவையில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உரிமை மீறல் நோட்டீஸ் அனுப்பியுள்ளார். அம்பேத்கர் குறித்து அமித்ஷா பேசிய தொனி நையாண்டித்தனமாக, மிக மோசமாக இருந்தது என்று கூறியுள்ள கார்கே, மாநிலங்களவை விதி 188-ன் கீழ் அமித்ஷா மீது ஏன் உரிமை மீறல் பிரச்சினையை கொண்டு வரக்கூடாது என கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# 25வது ஆண்டு திரையுலக பயணத்தில் இயக்குநர் பாலா ; விழா எடுத்து கொண்டாடிய தமிழ் திரையுலகம்



சென்னை, 19 டிசம்பர் 2024: 1999ல் வெளியான 'சேது' படம் மூலம் தமிழ் சினிமாவில் இயக்குநராக அடியெடுத்து வைத்து இந்த 25 வருடங்களில் தமிழ் சினிமாவின் அடையாளமாகவே மாறிப்போனவர் இயக்குநர் பாலா. தற்போது அவர் இயக்கி அருண் விஜய் கதாநாயகனாக நடித்துள்ள வணங்கான் இசை வெளியீடும், சினிமாவில் பாலாவின் 25 ஆண்டுகளைக் கொண்டாடும் விழாவும் சென்னை வர்த்தக மையத்தில் தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்கள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் முன்னிலையில் மிகப் பிரம்மாண்டமாக நடைபெற்றது. விழாவில் இயக்குநர்கள் சீமான், மிஷ்கின், சமுத்திரக்கனி, ஏ.எல். விஜய், லிங்குசாமி, ராம், மணிரத்னம், கே. பாக்கியராஜ், மாரி செல்வராஜ், விக்ரமன், ஆர். வி. உதயகுமார், கே. எஸ். அதியமான், வினோத் (கொட்டுக்காளி), பிருந்தா சாரதி, வசந்த பாலன், சீனுராமசாமி, கஸ்தூரி ராஜா, பேரரசு, பொன்ராம், ஷி.ஞீ. துரை, சிங்கம் புலி, சரண், அரவிந்த் ராஜ், எழில், கோபிநாத் (ஜீவி), பி. எஸ் வினோத் ராஜ், பாரி இளவழகன், ஜி. ஆர். ஆதித்யா, நாகேந்திரன், சுரேஷ், அஜயன் பாலா, கேபிள் சங்கர், அறிவழகன் (ஈரம்), சுசீந்திரன், மீரா கதிரவன், மூர்த்தி, நித்திலன், நம்பிராஜன், நடிகர்கள் சிவக்குமார், விஜயகுமார், சூர்யா, சிவகார்த்திகேயன், ஜி. வி பிரகாஷ், கருணாஸ், தம்பி ராமையா, மன்சூரலிகான், வெற்றி, பிரஜின், பிரதீப், சிவாஜி, அரீஷ் குமார், ஆர்.கே சுரேஷ், கூல் சுரேஷ், சூப்பர் குட் சுப்பிரமணி, வீரா, அப்புக்குட்டி, ஏ.எல். உதயா, ஆர். கே.கிரண் ( ஆர்ட் டைரக்டர்),

தயாரிப்பாளர்கள் சத்யஜோதி தியாகராஜன், ஏ.எல். அழகப்பன், தனஞ்செயன், அம்மா கிரியேஷன்ஸ் சிவா, றி லி தேனப்பன், சித்ரா லஷ்மண், வெற்றிக்குமரன்,

நடிகைகள் கருத்தம்மா ராஜஸ்ரீ, சாயா தேவி, வரலஷ்மி, காயத்ரி ரகுராம், அபிதா, வேதிகா, ரித்தா, வசுந்தரா, மதுமிதா, பிரிகிடா, ஜூலி, ஸ்வேதா டோரத்தி உள்ளிட்ட ஏராளமான திரையுலகினர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இந்த விழாவை தொகுப்பாளினி அர்ச்சனா மிகச்சிறப்பான முறையில் தொகுத்து வழங்கினார்..

நிகழ்ச்சியின் துவக்கத்தில் இயக்குநர் பாலாவின் இயக்கத்தில் வெளிவந்த படங்களின் ஹிட் பாடல்களைப் பாடி அசத்தினார்கள். அடுத்து வந்த தப்பாட்டம் அரங்கை அதிரவைத்து அடங்கியது. அனைவரையும் வரவேற்று தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி பேசும்போது,. "ஒருமுறைதான் சிவகுமார் சாரை சந்தித்தேன். அவர் ஓர் அற்புதமான மனிதர். நாம் பலரையும் இழந்துவிட்டோம். சிவகுமார் அவர்கள்தான் தமிழ் சினிமாவுக்கே தந்தையாக இருந்துவருகிறார். 25 ஆண்டு விழாவை கொண்டாடவேண்டும் என்று பாலாவிடம் கேட்டேன். நான் என்ன செய்துவிட்டேன். எனக்கு ஏன் விழா எடுக்கிறீர்கள் என்றார். நிச்சயமாக விழா எடுத்தே தீரவேண்டும் என்று அப்போது உறுதியாக நினைத்தேன். சினிமாவில் சாதனை படைத்த பாலுமகேந்திரா, மகேந்திரன், ருத்ரையா போன்றவர்களை நாம் பாராட்டவில்லை. இனிமேலாவது நாம் எல்லோருக்கும் விழா எடுத்துப் பாராட்டத் தொடங்கவேண்டும்" என்று சுருக்கமாகப் பேசினார். நிகழ்வின் இடையே தமிழ் திரைப்பட இயக்குநர்கள் சங்கம் சார்பில் இயக்குநர் கே. பாக்யராஜ், இயக்குநர் மணிரத்னம் முன்னிலையில் இயக்குநர் பாலாவுக்கு பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்தனர். பொன்னாடையுடன் மேடையேற்றி தயாரிப்பாளர்கள் தாணு, தியாகராஜன், கதிரேசன், சிவா, தனஞ்ஜெயன் போன்றவர்கள் பாலாவின் இயக்கத்தைப் பற்றியும் அவரது கடும் உழைப்பையும் அர்ப்பணிப்பையும் பாராட்டிப் பேசினார்கள். அடுத்து பாலாவுடன் கதை விவாதங்களில் ஈடுபட்ட பவா செல்லதுரை, சிங்கம்புலி, அஜயன் பாலா, யூகி சேது ஆகியோரை இயக்குநர் மிஷ்கின் சுவாரசியமான கேள்விகளுடன் பேட்டி எடுத்தார்.

விழா தொடங்கிய சில நிமிடங்களில் பரபரப்பாக அரங்கிற்குள் நுழைந்தார்கள் சிவகுமாரும் சூர்யாவும். முதலில் சூர்யா பேச அழைக்கப்பட்டார். அப்போது நடிகர் சிவகுமார், இயக்குநர் பாலாவுக்கு தங்கச் செயினை அணிவித்து மகிழ்ந்தார். இயக்குநர் பாலாவின் மீதான பேரன்பையும், நன்றியையும் தன் பேச்சில் சூர்யா நெகிழ்ச்சியுடன் வெளிப்படுத்தினார். நடிகர் சூர்யா பேசும்போது, "அண்ணன் பாலாவின் 'சேது' திரைப்படம் எனக்குள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. ஒரு நடிகரால் இப்படியெல்லாம் நடிக்க முடியுமா? ஒரு இயக்குநரால் இப்படி ஒரு படத்தை இயக்கமுடியுமா என்று நினைத்தேன். பல நாட்கள் சேதுவின் தாக்கம் இருந்தது. அடுத்த படம் உன்னை வைத்து இயக்குகிறேன் என பாலா சொன்ன ஒரு வார்த்தை எல்லாவற்றையும் மாற்றிவிட்டது. 2000 ஆம் ஆண்டு எனக்கு அந்த தொலைபேசி அழைப்பு வரவில்லை என்றால் எனக்கு இந்த வாழ்க்கையே இருந்திருக்காது. 'நந்தா' படம் பார்த்துவிட்டு தான் கவுதம் வாசுதேவ் மேனன் 'காக்க காக்க' படத்தில் நடிக்க அழைத்தார். அதன்பிறகு இயக்குநர் முருகதாஸ் அழைத்தார். இவை எல்லாவற்றிற்கும் காரணம் இயக்குநர் பாலாதான். உறவுகளுக்கு தனது படங்களில் பாலா மதிப்புக் கொடுப்பார். பாலா அண்ணன் என்கிற ஒரு வார்த்தை வெறும் வார்த்தையல்ல. அது ஓர் உறவு. நிரந்தரமான உறவு. இந்த வாழ்க்கை கொடுத்ததற்கு என்னுடைய அன்பும், மரியாதையும். 'வணங்கான்' முக்கியமான படமாக இருக்கும்" என்று உருக்கமாகப் பேசினார் சூர்யா. சூர்யா பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று பாலாவிடம் அர்ச்சனா கேட்க மிகுந்த தயக்கத்துடன் ஓர் அனுபவத்தை அவர் பகிர்ந்துகொண்டார். "சூர்யா முன்னே நான் சிகரெட் பிடிக்கமாட்டேன். தம்பி வருத்தப்படுவான். ஒருமுறை படப்பிடிப்பில் மறைந்து சிகரெட் குடித்தேன். ஆனால் படப்பிடிப்பில் எத்தனை முறை சிகரெட் குடித்தேன் என்று நினைவு வைத்து கேட்பான். என் உடம்பு மேல என்னைவிட அவனுக்கு அக்கறை அதிகம்" என்று நெகிழ்வுடன் பகிர்ந்துகொண்டார் இயக்குநர் பாலா.

நடிகர் சிவகார்த்திகேயன் பேசும்போது, "சேது படம் வரும்போது எனக்கு 14 வயது. அந்த படத்தின் கிளைமாக்ஸ் காட்சி எனக்கு ரொம்பவே பாதிப்பை கொடுத்தது. அவரது படங்களை எல்லாம் திரையரங்கில் பார்த்தது இப்போதும் நினைத்துப் பார்க்கிறேன். அமரன் படம் இந்த தீபாவளிக்கு வெளியானபோது படத்தின் க்ளைமாக்ஸ் எதிர்மறை முடிவாக இருக்கிறதே என்று எல்லோரும் சொன்னார்கள். ஆனால் பாலா அண்ணனின் பிதாமகன் படம் இதேபோல தீபாவளிக்கு எதிர்மறை முடிவுடன் வந்து ஹிட் அடித்தது என்றும் சொன்னார்கள்.. அதே போல தான் நடந்தது. அவருடைய அவன் இவன் பட விழாவை நான் தான் தொகுத்து வழங்கினேன். இன்றும் அது என் மனதில் என் நினைவிருக்கிறது. அருண் விஜய் அண்ணன் தான் இந்த விழாவிற்கு நீ கட்டாயம் வர வேண்டும் தம்பி என கூப்பிட்டார். எப்போதுமே விட்டுக் கொடுக்காமல் முயற்சி செய்வதுதான் அவருடைய உண்மையான வெற்றியாக நான் பார்க்கிறேன். ஒரு தம்பியாக அவரது இந்த படத்தின் வெற்றிக்கு நான் வாழ்த்துகிறேன்" என்று கூறினார். நடிகர் சிவகுமார் பேசும்போது, "பாலா சினிமாவுக்கு வந்து 25 வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் இப்போதும் சேது படத்தில் அவர் வைத்த ஷாட்டுகள் எல்லாம் எனக்கு அப்படியே நினைவில் இருக்கின்றன. கிளைமாக்ஸில் விக்ரமின் கையை நான் பிடிக்கும்போது அவர் தட்டி விட்டு செல்வார். அப்போது நான் நிமிர்ந்து பார்ப்பேன். அந்த காட்சியை எல்லாம் என்னால் மறக்கவே முடியாது" என்றார்.

இசையமைப்பாளரும் நடிகருமான ஜி.வி பிரகாஷ் குமார் பேசும்போது, "நான் சினிமாவிற்கு வருவதற்கு மிக முக்கிய தூண்டுதலாக இருந்தவர்களில் முக்கியமானவர் இயக்குநர் பாலா. அவருடைய 25வது வருட விழா என்பது எனக்கு ரொம்ப ஸ்பெஷல். ஏனென்றால் அவரது பல படங்களில் நான் இசையமைத்திருக்கிறேன். அவரது டைரக்ஷனில் நடித்திருக்கிறேன். அந்த வகையில் எனக்கு நடிப்பில் அவர்தான் குரு. 'வணங்கான் படத்திற்கு' நான் பாடல்களுக்கு இசையமைத்து இருக்கிறேன். சாம் சி.எஸ் பின்னணி இசை அமைத்திருக்கிறார்" என்று கூறினார்.

# நாடாளுமன்ற கேள்வி: சிபிஜிஆர்ஏஎம்எஸ் மூலம் புகார்களுக்குத் தீர்வு

சென்னை, 19 டிசம்பர் 2024: 2020-2024 வரையிலான கடந்த ஐந்து ஆண்டுகளில் (31.10.2024 வரை) மையப்படுத்தப்பட்ட பொதுமக்கள் குறை தீர்க்கும், கண்காணிப்பு அமைப்பின் (சிபிஜிஆர்ஏஎம்எஸ்) அடிப்படையில் மொத்தம் 1,12,30,957 குறைகள் தீர்க்கப்பட்டுள்ளன. 2024 ஜனவரி- அக்டோபர் முதல் சிபிஜிஆர்ஏஎம்எஸ் இணையதளத்தில் 23,24,323 குறைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

குறைகளை உரிய நேரத்தில் தீர்த்து, பயனுள்ளதாகவும், மக்களுக்கு எளிதில் அணுகக்கூடியதாகவும் மாற்ற சிபிஜிஆர்ஏஎம்எஸ் -ல் 10 அம்ச சீர்திருத்தங்களை அரசு மேற்கொண்டுள்ளது. மாநிலங்களவையில் இன்று கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் பணியாளர், பொதுமக்கள் குறைதீர்ப்பு, ஓய்வூதியத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

# குடிமைப் பணி சேவைகளின் செயல்திறன், பொறுப்புணர்வு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான முன்முயற்சிகள்

சென்னை, 19 டிசம்பர் 2024: 'குறைந்தபட்ச அரசு, அதிகபட்ச ஆளுமை' என்ற கொள்கைக்கு இணங்க, 'முடிவெடுப்பதில் திறனை அதிகரிப்பதற்கான முன்முயற்சி' திட்டத்தை அரசு மேற்கொண்டுள்ளது. கர்மயோகி இயக்கம் என்பது அரசு ஊழியர்களின் மனப்பான்மை, திறன்கள் மற்றும் அறிவை மேம்படுத்துவதற்கான மத்திய அரசின் முன்முயற்சியாகும். களம், செயல்பாடு மற்றும் நடத்தைகளில் கூடுதல் திறனை வளர்ப்பதை இந்த இயக்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் முக்கிய அம்சம் டிஜிட்டல் கற்றல் தளம் என்பதாகும். இந்தத் தளம் 1500-க்கும் மேற்பட்ட படிப்புகளை வழங்குகிறது. இது அரசு ஊழியர்களுக்கு ஆளுகை, கொள்கை அமலாக்கம் மற்றும் தொழில்நுட்பத்தில் தங்கள் திறன்களை மேம்படுத்திக் கொள்ள உதவுகிறது. இது மிகவும் திறமையான பொது சேவை வழங்கலை உறுதி செய்வதையும் ஊக்குவிக்கிறது. பொதுச் சேவையில் செயல்திறன், பொறுப்பு மற்றும் வெளிப்படைத்தன்மையை வளர்க்க உதவுகிறது.

மாநிலங்களவையில் இன்று கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் பணியாளர், பொதுமக்கள் குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதியத் துறை இணையமைச்சர் (தனிப்பொறுப்பு) டாக்டர் ஜிதேந்திர சிங் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

# வானிலை முறைகளில் பருவநிலை மாற்றத்தின் தாக்கங்கள்

சென்னை, 19 டிசம்பர் 2024: நாடு முழுவதும் பருவநிலை மாற்றத்தை அரசு கவனத்தில் கொண்டு, அதன் தாக்கத்தை மதிப்பிடவும், குறைக்கவும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. பன்முக அணுகுமுறையானது நாட்டின் வானிலை முறைகளில் ஏற்படும் பருவநிலை மாற்றத்தின் சாத்தியமான தாக்கங்களை தணிவிப்பு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது,

பருவநிலை மாற்றத்திற்கான தேசிய செயல் திட்டம்: இது 2008-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இது பருவநிலை மாற்றத்தை நிவர்த்தி செய்யும் அதே நேரத்தில் நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பதிலும் கவனம் செலுத்துகிறது. சூரிய சக்தி, எரிசக்தி திறன், நிலையான வேளாண்மை, நீர் பாதுகாப்பு ஆகியவை இதில் அடங்கும்.

இந்தியா தனது தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் மூலம் பேரழிவை எதிர்கொள்ளும் தயார்நிலையை பலப்படுத்தியுள்ளது, இது தீவிர வானிலை நிகழ்வுகளின் (எ.கா., சூறாவளிகள், வெப்ப அலைகள், வெள்ளம்) தாக்கங்களைக் குறைக்க இந்திய வானிலை ஆய்வுத் துறையுடன் இணைந்து செயல்படுகிறது.

வறட்சியைத் தாங்கும் பயிர்கள், மேம்பட்ட நீர் மேலாண்மை மற்றும் மாறும் மழை, வெப்பநிலை முறைகளுக்கு ஏற்ப பயிர் முறைகளில் மாற்றங்கள் போன்ற பருவநிலை-நெகிழ்திறன் வேளாண் நடைமுறைகளை அரசு ஊக்குவித்துள்ளது.

நீர் பற்றாக்குறை குறித்த கவலைகள் அதிகரித்து வருவதால், நீர் நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கும், நிலையான நீர் பயன்பாட்டை உறுதி செய்வதற்கும், குறிப்பாக வறட்சி பாதிப்புக்குள்ளான பகுதிகளில், நீர்வள இயக்கம், தேசிய நீர் இயக்கம் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு தொடங்கியுள்ளது.

மாநிலங்களவையில் இன்று கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்மற்றும் புவி அறிவியல் துறை இணையமைச்சர் (தனிப்பொறுப்பு) டாக்டர் ஜிதேந்திர சிங் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

# முதலமைச்சர், துணை முதலமைச்சர், ஜெய் ஷா வாழ்த்து

சென்னை, 19 டிசம்பர் 2024: கிரிக்கெட் வீரர் அஸ்வின் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளதைத் தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக முதலமைச்சர் தனது சமூக வலைதளப் பதிவில், ''தங்களது வியத்தகு கிரிக்கெட் பயணம் இரசிகர்கள் எண்ணி மகிழ எண்ணற்ற பல நினைவுகளை வழங்கியுள்ளது; பல லட்சம் பேரை எல்லைகள் கடந்து பெரிதாகக் கனவு காண ஊக்குவித்துள்ளது.

தங்களது வாழ்க்கையின் அடுத்தகட்டத்திலும் ஒவ்வொரு முயற்சியிலும் ஒப்பற்ற திறமையை வெளிப்படுத்திப் பெரும் வெற்றியடைய வாழ்த்துகிறேன்'' என்று கூறியுள்ளார்.

அஸ்வினுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எக்ஸ் தள பக்கத்தில் கூறியுள்ளார்.

உதயநிதி ஸ்டாலின் கூறியிருப்பதாவது:- சென்னை முதல் உலக அரங்கு வரை, தமிழ்நாட்டுக்கும் இந்தியாவுக்கும் பெருமை சேர்த்திருக்கிறீர்கள். ஒரு கிரிக்கெட் வீரராக உங்கள் தாக்கம் என்றென்றும் நினைவில் இருக்கும். ஒவ்வொரு விக்கெட்டிலும், ஒவ்வொரு ஸ்பெல்லிலும், ஒவ்வொரு போட்டியிலும், நீங்கள் விளையாட்டை உயர்த்தி, எண்ணற்ற நினைவுகளை எங்களுக்குக் கொடுத்தீர்கள். எதிர்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகள்! என கூறியுள்ளார்.

இந்த நிலையில் அஸ்வின் ஓய்வு தொடர்பாக ஐசிசி தலைவர் ஜெய் ஷா வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

இந்தியாவின் சிறந்த மேட்ச் வின்னர்களில் ஒருவர். பந்தைக் சிறப்பாக கையாளும் வித்தைக்காரர் மற்றும் விளையாட்டின் திறமையான சிந்தனையாளர். பெருமைப்பட வேண்டிய சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை. எதிர்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துக்கள். என தெரிவித்துள்ளார்.




தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (19.12.2024) கொத்தடிமைத் தொழிலாளர் கண்காணிப்பு குழு கூட்டம் மற்றும் குழந்தைத் தொழிலாளர் தடுப்புப்படை குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமிகு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.அஜய் சீனிவாசன் உள்ளார்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (19.12.2024) கொத்தடிமைத் தொழிலாளர் கண்காணிப்பு குழு கூட்டம் மற்றும் குழந்தைத் தொழிலாளர் தடுப்புப்படை குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமிகு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.அஜய் சீனிவாசன் உள்ளார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# பிரமல் ஃபார்மா நிறுவனம் லாக்டோ காலமைன்டி க்கான அதன் பிராண்ட் தூதராக மிருனால் தாக்கூரை நியமித்துள்ளது

சென்னை, 19 டிசம்பர் 2024: பிரமல் ஃபார்மா லிமிடெட் நிறுவனத்தின் இந்தியா கன்ஸுமர் ஹெல்த்கேர் (மிசிபி) அதன் முன்னணி சரும பராமரிப்பு பிராண்டான லாக்டோ காலமைன்டி க்கான புதிய பிராண்ட் தூதராக பிரபல நடிகையான மிருணால் தாக்கூர் உடனான தனது கூட்டாண்மையை இன்று அறிவித்தது. பயனுள்ள சரும பராமரிப்பு தீர்வுகளை வழங்குகின்ற ஒரு பாரம்பரியத்துடன், லேக்டோ காலமைன், சரும பராமரிப்புக்கான ஒரு முன்னணி நிபுணராக தனது நிலையைத் தக்கவைத்துக்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

லேக்டோ காலமைன் நீண்ட காலமாக சரும பராமரிப்பில் நம்பகமான பெயராக இருந்து வருகிறது, அதன் நிபுணத்துவம் மற்றும் பல்துறை நன்மைகளுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன் மென்மையான மற்றும் பயனுள்ள ஃபார்முலாவிற்கு மதிப்பளிக்கப்பட்ட இது எண்ணெய் சருமம் மற்றும் முகப்பரு முதல் தடித்த தோல், தடிப்புகள் மற்றும் மருக்கள் வரை பல்வேறு வகையான தோல் பராமரிப்பு கவலைகளை நிவர்த்தி செய்ய நுகர்வோரால் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது மற்றும் பரிந்துரைக்கப்படுகிறது. அதிகப்படியான எண்ணெயை உறிஞ்சுகிற கயோலின் களிமண்; துளைகளை அவிழ்த்து பருக்களை தடுக்க உதவுகிற துத்தநாக ஆக்சைடு; மற்றும் ஈரப்பதத்தைத் தக்கவைக்கும் கிளிசரின் ஆகிய முக்கிய மூலக்கூறுகள் ஆரோக்கியமான, தெளிவான சருமத்தை மேம்படுத்த ஒன்றாகச் செயல்படுகின்றன. கடந்த சில தசாப்தங்களாக, மருந்தகங்கள், அழகுசாதனப் பொருட்கள் மற்றும் பொதுக் கடைகள், ஹைப்பர் மற்றும் சூப்பர் மார்க்கெட்டுகள், பிற நவீன சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் இ-காமர்ஸ் தளங்கள் உட்பட பல சேனல்களில் இந்த பிராண்ட் தனது வரம்பை விரிவுபடுத்தியுள்ளது.

எண்ணெய் படிந்த சருமம் தொடர்பான பிரச்சனைகளை எதிர்கொள்ளும் நுகர்வோருக்கு விருப்பமான பிராண்டாக மாறுவதன் மூலம் சரும பராமரிப்பு சந்தையில் தனது நிலையை வலுப்படுத்த இந்த நிறுவனம் உத்தேசித்துள்ளது. இந்த நிலைப்பாட்டைக் கட்டியெழுப்ப, லேக்டோ காலமைன் அதன் தயாரிப்புகளின் வரம்பில் அதன் புதிய மல்டி மீடியா பிரச்சாரமான 'ஆய்லி ஸ்கின் ஹாய் டு லேக்டோ காலமைன்' என்பதை மிருணால் தாக்கூர் உடன் இணைந்து அறிமுகப்படுத்துகிறது. அடுத்த 18-24 மாதங்களில், இந்த பிராண்ட் தனது இருப்பை பரந்த அளவிலான தயாரிப்புகள் மூலம் மற்றும் புதிய சேனல்கள் மற்றும் ஸ்டோர்களில் விரிவுபடுத்தவும், ஈ-காமர்ஸ் இணையதளங்களில் வளர்ச்சியை துரிதப்படுத்தவும் திட்டமிட்டுள்ளது.

பிரமல் ஃபார்மா நிறுவனத்தின் தலைவர் நந்தினி பிரமல் கூறுகையில், "இந்திய சரும பராமரிப்புத் துறை வேகமாக வளர்ந்து வருகிறது, இது நுகர்வோர் விழிப்புணர்வு மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட தயாரிப்புகளுக்கான தேவை ஆகியவற்றின் மூலம் அதிகரித்து வருகிறது. இந்த வளர்ந்து வரும் தேவைகளை பூர்த்தி செய்ய, லேக்டோ காலமைன் அதன் பிரபலமான லோஷனில் இருந்து 20க்கும் மேற்பட்ட புதிய தயாரிப்புகளுடன் முழு சரும பராமரிப்பு வரம்பிற்கு விரிவடைந்துள்ளது. எங்கள் புதிய பிராண்ட் தூதராக மிருணால் தாக்கூர் இருப்பதால், ஒரு நம்பகமான மற்றும் பொருத்தமான பிராண்டை உருவாக்குவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை நாங்கள் வலுப்படுத்துகிறோம். எங்களின் விரிவாக்கப்பட்ட சன்ஸ்கிரீன்கள் மற்றும் ஃபேஸ் வாஷ்களுடன் இணைந்த அவரது கூட்டாணமை, ஒரு பரந்த பார்வையாளர்களுடன் இணைவதற்கும் நம்பகமான சரும பராமரிப்பு பிராண்டாக எங்கள் நிலையை வலுப்படுத்துவதற்கும் எங்களுக்கு உதவும். அவரது பல்துறை மற்றும் ஒளி வீசும் இருப்புக்கு பெயர் பெற்ற மிருனாள், எங்கள் புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்துவதிலும் மற்றும் பல்வேறு நுகர்வோர் குழுக்களில் பிராண்டின் தெரிவுநிலையை அதிகரிப்பதிலும் முக்கிய பங்காற்றுவார்." என்று கூறினார்.

லேக்டோ காலமைன் உடனான இந்த கூட்டுழைப்பைப் பற்றிப் பேசிய மிருனால் தாக்கூர், "அதன் சரும பராமரிப்பு தீர்வுகளுக்காக தலைமுறைகளின் நம்பிக்கையைப் பெற்றுள்ள ஒரு பிராண்டுடன் இணைந்திருப்பதால் நான் பெருமைப்படுகிறேன். லாக்டோ காலமைன் இன் புதுமை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றின் இணைவானது, அழகு என்று வரும்போது உண்மையிலேயே எனது சொந்த மதிப்புகளை பிரதிபலிக்கிறது. இந்த சிந்தனையுடன் வடிவமைக்கப்பட்ட தயாரிப்புகளை ஒரு பரந்த பார்வையாளர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன் மற்றும் ஆரோக்கியமான, ஒளிரும் சருமத்தை ஊக்குவிப்பதன் மூலம் பெண்களின் நம்பிக்கையை ஊக்குவிக்கிறேன்." என்று கூறினார்.

# 'ஸ்பர்ஷ்' ஓய்வூதிய குறை தீர்க்கும் முகாம்

சென்னை, 19 டிசம்பர் 2024: ஸ்பர்ஷ்' மூலம் பாதுகாப்பு ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறும் முன்னாள் படைவீரர்கள் (ராணுவம், கடற்படை, விமானப்படை) மற்றும் சார்ந்தோர்கள் தங்களது வாழ்நாள் சான்று சமர்ப்பிப்பதில் ஏற்படும் இன்னல்கள் மற்றும் ஓய்வூதியம் சார்ந்த குறைகளை நிவர்த்தி செய்ய சென்னை பாதுகாப்பு கணக்குகள் கட்டுப்பாட்டாளர் அலுவலகத்தின் சார்பாக, ஸ்பர்ஷ்' ஓய்வூதிய குறை தீர்ப்பு முகாம் 21.12.2024 அன்று காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை வேலூரில் உள்ள வி ஐ டி தொழில்நுட்பக் பல்கலையின், அண்ணா கலையரங்கில் நடைபெற உள்ளது.

இந்த முகாமில் மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார் . மேலும் லெப். ஜெனரல் கரம்பீர் சிங் பிரர், தெற்கு பிராந்தியத்தின் கட்டளை அலுவலர்,

டாக்டர் மயங்க் ஷர்மா, பாதுகாப்பு கூடுதல் தலைமை கணக்காளர் மற்றும் வி ஐ டி பல்கலைக்கழகத்தின் நிறுவனர், வேந்தர் திரு விஸ்வநாதன் ஆகியோர் இவ்விழாவை சிறப்பிக்கின்றனர்

இவ்விழாவில், சுமார் ரூ. 1 கோடி மதிப்பிலான காசோலைகளை மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு வழங்குகிறார். மேலும் பாதுகாப்பு வீரதீர விருது பெற்ற வீரர்களையும் கௌரவிக்கின்றார்

இவ்விழாவில் 50 குறை தீர்க்கும் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளது. சென்னை பாதுகாப்பு கணக்குகள் கட்டுப்பாட்டாளர், டி.ஜெயசீலன், ஐ டி ஏ எஸ் இக்குழுக்களுக்கு தலைமையேற்று வழிநடத்துகிறார். வாழ்நாள் சான்று அளிக்க இயலாதோர் மற்றும் தவறியோர் அதனை டிஜிட்டல் முறையில் அளித்திட முகாமில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் தொடர்பான அனைத்து குறைபாடுகளுக்கும் இம்முகாமில் தீர்வு காணப்படும். ஒரு பதவி, ஒரே ஓய்வூதியம் தொடர்பான சந்தேகங்கள் மற்றும் குறைகள் நிவர்த்தி செய்யப்படும்.

இம்முகாமில் கலந்து கொள்ள விரும்பும் முன்னாள் படை வீரர் மற்றும் சார்ந்தோர் தங்களது படை பணிச்சான்று, அடையாள அட்டை, ஓய்வூதிய ஒப்பளிப்பு ஆணை, ஆதார் அட்டை, பான் அட்டை மற்றும் வங்கி கணக்கு புத்தகம் ஆகிய ஆவணங்களின் அசல் உடன் நேரில் நேரில் வந்து தங்கள் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இந்த அரிய வாய்ப்பினை ஓய்வூதியம் பெறும் முன்னாள் படைவீரர்கள் (ராணுவம், கடற்படை, விமானப்படை) மற்றும் சார்ந்தோர் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் வணிகங்களை மேம்படுத்த, யெஸ் வங்கி ஐ ஆர் ஐ எஸ் பிஸ் மூலம் இயங்கும் யெஸ் பிஸ்னஸை அறிமுகப்படுத்துகிறது




சென்னை, 19 டிசம்பர் 2024: இந்தியாவின் ஆறாவது பெரிய தனியார் துறை வங்கியான யெஸ் வங்கி, யெஸ் பிசினஸை அறிமுகப்படுத்துவதாக அறிவித்தது. இது வணிகப் பிரிவில் அதன் கவனத்தை கூர்மைப்படுத்துவதற்கும் அவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும் ஒரு முயற்சியாகும். குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் வணிகங்களுக்கான (எம்.எஸ்.எம்.இ.) வங்கி மற்றும் தொடர்புடைய சேவைகளை ஒரே கூரையின் கீழ் கொண்டு வர யெஸ் பிசினஸ் வடிவமைக்கப்பட்டுள்ளது. 'யெஸ் வணிகம்' என்பது ஒரு தொழில்முனைவோர் வளர்ந்து வரும் வணிகத்தை கவனிக்கும் விதத்தால் ஈர்க்கப்பட்டுள்ளது, இது ஒரு குழந்தையை வளர்ப்பது போன்றது, நிலையான முயற்சி, நெருங்கிய கவனம் மற்றும் உண்மையான அர்ப்பணிப்புடன் வழங்கப்படும். இந்த வணிகப் பிரிவு பரந்த அளவிலான கருவிகள் மற்றும் வளங்களுக்கான ஒற்றை புள்ளி அணுகலை வழங்குகிறது, இது எம்.எஸ்.எம்.இ.க்கள் தங்கள் அன்றாட நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கும் நீண்ட கால வளர்ச்சியை அடைவதற்கும் உதவுகிறது.

வணிக நடவடிக்கைகளை எளிமைப்படுத்துவதற்கும் வலுப்படுத்துவதற்கும் பரந்த அளவிலான ஒருங்கிணைந்த தீர்வுகளை வழங்கும் டிஜிட்டல் இடைமுகமான யெஸ் வங்கியின் 'ஐஆர்ஐஎஸ் பிஸ்' இந்த அறிமுகத்தின் மையமாக உள்ளது. பாரம்பரிய வங்கிக்கு அப்பாற்பட்ட கூடுதல் வளங்களுடன் முக்கிய வங்கி சேவைகளை இணைப்பதன் மூலம், ஐஆர்ஐஎஸ் பிஸ் தொழில்முனைவோர் மற்றும் வணிக உரிமையாளர்களுக்கு ஒரே தளத்தைப் பயன்படுத்தி தங்கள் நிறுவனத்தின் பல அம்சங்களைக் கையாள உதவுகிறது.

ஐ ஆர் ஐ எஸ் பிஸ் செயலியின் முக்கிய அம்சங்கள்:

எளிமையான, டிஜிட்டல் ஆன்போர்டிங்: வீடியோ கேஒய்சி உடன் முழுமையாக டிஜிட்டல் நடப்புக் கணக்கு அமைவு, ஆவண வேலைகளைக் குறைத்து, தொடங்குவதற்கான நேரத்தைக் குறைக்கிறது. ஒருங்கிணைந்த கணக்கு மேலாண்மை: வணிக உரிமையாளர்கள் தனிப்பட்ட மற்றும் வணிக கணக்குகளை ஒன்றாக நிர்வகிக்க அனுமதிக்கும் ஒரு ஒருங்கிணைந்த பார்வை, அவர்கள் நிதி ஆரோக்கியத்தை கண்காணிக்கும் விதத்தை ஒழுங்குபடுத்துகிறது..

வங்கி சேவைகளுக்கு அப்பாற்பட்ட அணுகல்: கணக்கியல், வரிவிதிப்பு, ஊதியம் மற்றும் உலகளாவிய வர்த்தக நிதி ஆகியவற்றிற்கான பயன்பாட்டு ஆதரவு, முக்கியமான செயல்பாட்டுப் பணிகளை எளிதாகக் கையாள்வது மற்றும் பல வெளிப்புற தளங்கள் தேவையில்லை என்பதை உறுதிப்படுத்துகிறது.

விரைவான பரிவர்த்தனைகளுக்கான வணிக தீர்வுகள்: 'மெர்சண்ட் ஈஸி' மற்றும் 'மெர்ச்சன்ட் பிரைம்' போன்ற புதுமையான சலுகைகள், பணம் செலுத்துதல் உறுதிப்படுத்தல்களுக்கான சவுண்ட்பாக்ஸ்கள், ஒரே நாளில் பணம் செலுத்துதல் மற்றும் நீட்டிக்கப்பட்ட பண வைப்பு வரம்புகள், வணிகர்கள் மற்றும் வர்த்தகர்கள் பரிவர்த்தனைகளை திறமையாக நிர்வகிக்க உதவுகிறது.

நிதிகளுக்கான விரைவான அணுகல்: செயலியின் மூலம் ரூ. 25 லட்சம் வரை பிணையமில்லாத ஓவர் டிராஃப்ட்கள் கிடைக்கின்றன, இது செயல்பாட்டு மூலதனத்தை சரியான நேரத்தில் அணுகுவதை உறுதி செய்கிறது.

யெஸ் வங்கியின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி திரு. பிரசாந்த் குமார் கூறுகையில், "யெஸ் வங்கியில், இந்தியா முழுவதும் உள்ள வணிகங்களின் ஆலோசனைகள் மற்றும் சவால்களுக்கு ஏற்ப வங்கியை மறுவரையறை செய்ய நாங்கள் எப்போதும் முயன்று வருகிறோம். இந்தியாவில் உள்ள எம்.எஸ்.எம்.இ பிரிவு மிகப் பெரிய தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துகிறது மற்றும் நமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாக உள்ளது. ஐ ஆர் ஐ எஸ் பிஸ் செயலியானது வணிக வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு ஒருங்கிணைக்கப்பட்ட, தொழில்நுட்பம்-இயக்கப்பட்ட மற்றும் வாடிக்கையாளர்-முதல் தீர்வை வழங்குகிறது. இந்த நிகழ் கால செயலி வெறும் வங்கித் தளம் என்று மட்டும் வரையறுக்க முடியாது. இது அதை விட அதிகம்; இது எங்கள் வாடிக்கையாளர்களின் ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி செய்ய வங்கிக்கு அப்பாற்பட்ட ஒரு விரிவான வணிக கூட்டாளியாகும். ஐ ஆர் ஐ எஸ் பிஸ் அதன் 100+ அம்சங்களுடன் ஒவ்வொரு தொழில்முனைவோர் தேவைகளையும் நிவர்த்தி செய்யும் என்று நான் நம்புகிறேன், அவர்களின் வெற்றியை உந்துதலுக்கும் இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் பங்களிக்கும்" என்றார்

இந்த அறிமுகம் எம்.எஸ்.எம்.இ துறைக்கு சேவை செய்வதில் யெஸ் வங்கியின் வலுவான சாதனையை உருவாக்குகிறது. நிதியாண்டு25 இன் முதல் பாதியில், வங்கி எம் எஸ் எம் ஈகளுக்கு ரூ.15,279 கோடி கடன்களை வழங்கியது, அதே நேரத்தில் எஸ் எம் ஈ முன்பணங்கள் ஆண்டுக்கு ஆண்டு 25.8% வளர்ந்தன. பெரிய மற்றும் சிறிய வணிகங்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதில் வங்கியின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கும் வகையில், நடுத்தர நிறுவன முன்னேற்றங்கள் 25.5% அதிகரித்தன. யெஸ் வணிகத்துடன், வங்கி தொழில்முனைவோர் மீது தொடர்ந்து கவனம் செலுத்துகிறது. மேலும் அவர்கள் போட்டித்தன்மையுடன் இருக்கவும், மாறிவரும் சந்தை நிலைமைகளுக்கு ஏற்றவாறு செயல்படவும் உதவும் பயனுள்ள, பயன்படுத்த எளிதான தீர்வுகளை வழங்குகிறது.

ஐ ஆர் ஐ எஸ் பிஸ் செயலி மூலம் இயங்கும் யெஸ் பிசினஸின் துவக்கமானது, வங்கித்துறைக்கு அப்பாற்பட்ட புதுமையான, தொழில்நுட்பம் சார்ந்த தீர்வுகளை வழங்குவதில் யெஸ் வங்கியின் அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்துகிறது.

எம்.எஸ்.எம்.இ-கள் மற்றும் வணிகங்களின் வளர்ந்து வரும் தேவைகளை நிவர்த்தி செய்வதன் மூலம், வங்கி மதிப்பை உருவாக்கி நாடு முழுவதும் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# அமெரிக்காவில் ஏஐஓடி செயல்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்திருக்கும் ப்ளூ கிளவுட் சாஃப்டெக் சொல்யுஷன்ஸ் லிமிடெட்

BLUE CLOUD SOFTECH
serving technology better

சென்னை, 19 டிசம்பர் 2024: மிக நவீன ஏஐஓடி தீர்வுகள் வழங்கும் துறையில் ஒரு முன்னணி நிறுவனமாக திகழும் புளூ கிளவுட் சாப்ஃடெக் (பிசிஎஸ்), யுஎஸ்ஏ-ல் அதன் சமீபத்திய சர்வதேச செயல்திட்டத்தை வெற்றிகரமாக தான் நிறைவு செய்திருப்பதை பெருமிதத்துடன் அறிவிக்கிறது. இச்செயல்திட்டத்தில் செயற்கை நுண்ணறிவால் ஏதுவாக்கப்படும் ஊடக தகவல் தொடர்பு செயல்தளமான புளூரா (பிஎல்யூஆர்ஏ) அமலாக்கம் இடம் பெற்றிருந்தது. 150,000 யுஎஸ் டாலர் என்ற திட்ட மதிப்புடன் கூடிய இந்த முன்னெடுப்பானது உலகளவில் மேம்பட்ட உள்ளடக்க சரிபார்ப்பு திறன்களுடன் சிறப்பான நிலைமாற்றத்திற்கான தீர்வுகளை வழங்குவதில் இந்நிறுவனம் கொண்டிருக்கும் தொழில்நுட்ப திறனையும், நிபுணத்துவத்தையும் வெளிப்படுத்துகிறது. புளூரா என்பது பிசிஎஸ்-ஆல் உருவாக்கப்பட்டிருக்கும் செயற்கை நுண்ணறிவால் முன்னெடுக்கப்படும் ஒரு எண்டர்பிரைஸ் மற்றும் ஊடக தகவல் தொடர்பு செயல்தளமாகும்; மிக நவீன உள்ளடக்க சரிபார்ப்பு அல்கோரிதம்கள் வழியாக தகவலின் உண்மைத் தன்மையையும், நேர்மையையும் இது புரட்சிகரமாக்குகிறது. ஒரே மாதிரியான அல்லது ஏறக்குறைய அதேப்போன்ற உள்ளடக்கத்தை அடையாளம் காண்பதற்கு நகல் பிரதியைக் கண்டறிவதற்கான நவீன கண்டறிதல் தொழில்நுட்பத்தை இந்த செயல்தளம் பயன்படுத்துகிறது. இதன் மூலம் நிறுவனங்கள் அவைகளின் தகவலின் உண்மைத்தன்மையை பேணுவதற்கு இது பெரிதும் உதவுகிறது. நம்பகமான ஆதாரங்களுடன் குறுக்கு ஒப்பீடு முறையை இதன் ஆதார உறுதியாக்கல் அமைப்புமுறை பயன்படுத்துகிறது; இதன் மூலம் பகிரப்படும் தகவலின் துல்லியம் மற்றும் நம்பகத்தன்மையை இது உறுதி செய்கிறது. இச்செயல்தளத்தின் நுண்ணறிவுமிக்க உள்ளடக்க பகுப்பாய்வு கட்டமைப்பு, உள்ளார்ந்த நிலைத்தன்மையையும், இசைவையும் ஆராய்கிறது; உள்ளடக்க வாசகங்களுக்குள் உள்ள எதிர்முரண்களையும் மற்றும் சந்தேகத்திற்குரிய போக்குகளையும் கண்டறிகிறது. இந்த வலுவான சரிபார்ப்பு அமைப்பானது தனிப்பயனாக்கப்பட்ட உள்ளடக்க வழங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதால் பணியாளர்களுக்கு அவர்களது பதவி பொறுப்புகள் மற்றும் பணிகளுக்கு பொருத்தமானவாறு உறுதி செய்யப்பட்ட, தொடர்புடைய தகவல் மட்டுமே கிடைப்பதை உறுதி செய்கிறது. கண்டிப்பான உள்ளடக்க சரிபார்ப்பு தரநிலைகளை பராமரிக்கும் அதே நேரத்தில் தங்களது பிராண்டிங் அம்சங்களுடன் செயல்தளத்தை பிரத்யேகமாக்கி கொள்ள நிறுவனங்களுக்கு புளூரா-வின் ஒயிட் லேபிளிங் திறன்கள் உதவுகின்றன. ப்ளூ கிளவுட் சாப்ஃடெக் சொல்யுஷன்ஸ் லிமிடெட்-ன் தலைமை அதிகாரி ஜானகி யர்லகடா, உள்ளடக்க சரிபார்ப்பில் செயற்கை நுண்ணறிவின் சிறப்பான பங்கை வலியுறுத்தினார். "ஒவ்வொரு துறையிலும் கிடைக்கிற தகவலை நாம் சரிபார்க்கிற மற்றும் பயன்படுத்தும் விதத்தை செயற்கை நுண்ணறிவு புரட்சிகரமாக மாற்றி வருகிறது; உள்ளடக்க நேர்மையிலும் மற்றும் தகவல் பரிமாற்ற திறனிலும் புத்தாக்கத்தை இது முன்னெடுக்கிறது. நமது தினசரி செயல்பாடுகளில் செயற்கை நுண்ணறிவால் இயக்கப்படும் சரிபார்ப்பு அமைப்புகளை நாங்கள் ஒருங்கிணைக்கும் போது பொய்யான / தவறான தகவலை கண்டறிந்து சமாளிக்க நிறுவனங்களுக்கு திறனதிகாரத்தை நாங்கள் ஏதுவாக்குகிறோம்; அதே வேளையில் சிறப்பான சாத்தியத்திறன் கிடைக்குமாறு செய்கிறோம். இத்தொழில்நுட்பமானது உற்பத்தி திறனை மேம்படுத்துவது மட்டுமன்றி தகவலின் உண்மைத்தன்மையையும் உறுதி செய்கிறது; இதன் மூலம் நம்பகமான உண்மை அடிப்படையிலான முன்னேற்றம் மீது கவனம் செலுத்த நம்மை இது அனுமதிக்கும்" என்று அவர் விளக்கமளித்தார்.

ஜானகி யர்லகடா மேலும் பேசுகையில்: "யுஎஸ்ஏ-வில் இத்திட்டத்தின் வெற்றிகர அமலாக்கம், உள்ளடக்க சரிபார்ப்பில் புத்தாக்கம் மீதான எமது அர்ப்பணிப்பையும் மற்றும் தகவல் பரிமாற்றத்தில் உயர்நேர்த்தி நிலையையும் பிரதிபலிக்கிறது. உலகளவில் செயற்கை நுண்ணறிவு தீர்வுகளுக்கு நம்பகமான கூட்டாளியாக எமது அந்தஸ்தை இது மீண்டும் உறுதி செய்கிறது. இதன் மேம்பட்ட சரிபார்ப்பு திறன்களின் வழியாக உற்பத்தி திறன் மற்றும் தகவலின் நம்பகத்திறன் ஆகிய இரண்டையும் மேம்படுத்துவதன் வழியாக எமது வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான மதிப்பை புளூரா தொடர்ந்து உருவாக்கும் என்று நாங்கள் நிச்சயமாக நம்புகிறோம்" என்று கூறினார்.

# கோரமண்டல் இண்டர்நேஷனல் லிமிடெட் மற்றும் மஹிந்திரா கிருஷ் - இ ஆகிய இரு நிறுவனங்களும் இந்திய விவசாயிகளுக்கு ட்ரோன் மூலம் உரங்களைத் தெளிக்கும் சேவையை வழங்குவதற்காக இணைந்து செயல்பட உள்ளன!



சென்னை, 19 டிசம்பர் 2024: இந்தியாவில் வேளாண் தீர்வுகளை வழங்குவதில் முன்னணி வகிக்கும்வ் கோரமண்டல் இண்டர்நேஷனல் லிமிடெட் மற்றும் மஹிந்திரா & மஹிந்திரா லிமிடெட்டின் பண்ணை உபகரணத் துறை வணிகப்பிரிவான, க்ரிஷ்-இ ஆகிய இரு நிறுவனங்களும், இந்திய விவசாயிகளுக்கு பலனளிக்கும் வகையில் கோரமண்டலின் ட்ரோன் ஸ்ப்ரேயிங் சேவையான க்ரோமர் டிரைவ்-ஐ செயல்படுத்துவதற்காக உத்திசார்ந்த கூட்டு செயல்பாடு குறித்து அறிவித்து இருக்கின்றன.

ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, கர்நாடகா, தமிழ்நாடு, மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய இந்தியாவின் ஏழு முக்கிய மாநிலங்களில் தற்போது கோரமண்டலின் க்ரோமர் ட்ரைவ் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. க்ரோமர் ட்ரைவானது ஆர்.டி.ப்.ஒ.-வினால் பயிற்சியளிக்கப்பட்ட பைலட்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கோரமண்டலின் ட்ரோன் சேவைகள் இந்திய வேளாண் சந்தையில் தனித்துவமிக்கதாக செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் கோரமண்டலின் துணை நிறுவனமான தக்ஷா அன்மேன்ட்வ் சிஸ்டம்ஸ் மூலம் ட்ரோன் விநியோகம், ட்ரோன்களை இயக்கும் பைலட்களுக்கான பயிற்சி மற்றும் சேவை மையம் ஆகியவற்றில் தனது ஆதரவை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. வேளாண் தீர்வுகளை முன்னெடுப்பதில் கோரமண்டல் இண்டர்நேஷனல் இணைந்து செயல்படுவது, மிக வேகமாக வளர்ச்சி கண்டு வரும் சந்தையில் மிகவும் மேம்பட்ட சேவைகளை வழங்குவதற்கு முக்கிய அம்சமாக இருந்து வருகிறது.

இந்த ஒப்பந்தம், க்ரிஷ்-இ கேட்டி கே லியே செயலி மூலம் இந்த சேவைகளை எளிதில் பெறும் வாய்ப்புகளை வழங்குகிறது. இவற்றுடன் மஹிந்திராவின் பண்ணை உபகரணத் துறை வணிகப்பிரிவு வழங்கும் தொழில்நுட்பம் அடிப்படையிலான பண்ணைத் தீர்வுகளையும் சுலபமாக பெறும் வசதிகள் உள்ளன. இந்த வாய்ப்புகள் விவசாயிகள் தொடர்ந்து தங்களது வருமானத்தை அதிகரிக்கவும், பெரும் பலன்களைப் பெறவும் உதவுவதோடு, வேளாண் மதிப்பு சங்கிலியை மேலும் பரவலாக விரிவுப்படுத்தவும் உதவுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

கோரமண்டல் இண்டர்நேஷனல் லிமிடெட் மற்றும் மஹிந்திரா கிருஷ்-இ இடையேயான இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் [நான் - பைண்டிங் எனப்படும் சட்ட பிணைப்பில்லா ஒப்பந்தம்] கையெழுத்திடும் நிகழ்வின் போது, கோரமண்டலின் உர வணிகப் பிரிவின் தலைமை செயல்பாட்டு அதிகாரி திரு. அமீர் அல்வி, கூறுகையில், "கோரமண்டலின் க்ரோமர் ட்ரைவ், விவசாயிகளுக்கு விளைச்சலில் நல்ல பலன்களையும், பெரியளவிலான விளைச்சலையும், பல சௌகரியங்களை அளிப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அளிக்கிறது. கோரமண்டலின் க்ரோமர் ட்ரைவ் மற்றும் மஹிந்திரா கிருஷ்-இ இடையேயான இன்றைய புரிந்துணர்வு ஒப்பந்தம் [சட்ட பிணைப்பில்லா ஒப்பந்தம்], ட்ரோன் மூலம் உரம் தெளிப்பதை விவசாயிகளுக்கு எளிதில் கிடைக்கச் செய்கிறது. மேலும், இந்தியாவின் விவசாயத்தில் நேர்மறையான மாற்றத்திற்கான முன்னெடுக்கும் நமது பயணத்தில் ஒரு முக்கிய தருணத்தை பிரதிபலிப்பதாகவும் அமைந்திருக்கிறது. இந்த கூட்டு செயல்பாட்டின் மூலம் விவசாயிகள் தங்களது நிலங்களுக்கு உரமிடுவதற்காக மேற்கொள்ளும் செலவுகளைக் குறைப்பது, உற்பத்தியை வெகுவாக அதிகரிப்பது மற்றும் லாபத்தை மேம்படுத்துவதை போன்ற அம்சங்களை நோக்கமாகக் கொண்டு இணைந்திருக்கிறோம். கோரமண்டல் இண்டர்நேஷனல் லிமிடெட்டின் துணை நிறுவனமான தக்□ஷா அன்மேன்ட் சிஸ்டம்ஸின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் கோரமண்டலின் க்ரோமர் ட்ரைவ், உள் நிறுவன தயாரிப்பிலான அதிநவீன வேளாண் ட்ரோன்களை சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்ட பைலட்களுடன் செயல்படுத்தப்படுவதால் மேலும் கூடுதல் பலன்களை அளிக்கிறது. இந்த கூட்டு செயல்பாடு இந்திய விவசாயத்தில் புதுமைக்கான புதிய வாய்ப்புகளைத் உருவாக்கும், எங்கள் பங்குதாரர்களுக்கு மதிப்பை உருவாக்கும். மிக முக்கியமாக, விவசாயிகளின் வாழ்க்கையில் நேர்மறையான மற்றும் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.'' என்றார்.

மஹிந்திரா & மஹிந்திரா லிமிடெட்டின் பண்ணை உபகரணத் துறையின் தலைவர் திரு.ஹேமந்த் சிக்கா தங்களது புதிய முயற்சியின் மீதான பெரும் உற்சாகத்தையும், நம்பிக்கையையும், விவசாயத்தில் அதிநவீன தொழில்நுட்ப ஒருங்கிணைப்பையும் பற்றி குறிப்பிட்டார். மேலும் அவர் கூறுகையில், '"நாடு முழுவதும் அறியப்பட்ட கிருஷ்-இ நிறுவனத்தின் வலுவான செயல்பாடுகளையும், கோரமண்டலின் ஆழ்ந்த அனுபவமிக்க க்ரோமர் ட்ரைவின் பெரும் எண்ணிக்கையிலான ரோன்களின் மூலம், இந்தியா முழுவதிலும் விவசாயிகளுக்கு ட்ரோன்களின் பலன்களை எளிதில் கிடைக்கச் செய்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். உற்பத்தித்திறனை மேம்படுத்தி விளைச்சலை அதிகரிப்பதற்கும், சக்திவாய்ந்த இரசாயனங்களை விவசாயிகள் நேரடியாக தெளிப்பதைத் தவிர்ப்பதற்கும் இந்த முயற்சி ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக அமைந்திருக்கிறது. ட்ரோன் தொழில்நுட்பம், விளைச்சலை வெகுவாக அதிகரிக்க செய்வதோடு பயிர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட உரங்கள் மற்றும் இரசாயனங்களைத் தெளிப்பதை எளிதில் மேற்கொள்ள உதவுகிறது. இந்த கூட்டுசெயல்பாடானது கிருஷ்-இ வாடிக்கையாளர்களுக்கு 'கிருஷ்-இ கேதி கே லியே' ஆப் மூலம் ஏக்கர் ஒன்றுக்கு குறிப்பிட்ட கட்டணம் என்ற அடிப்படையில் ட்ரோன் தெளித்தலை எளிதில் பெற்று பயனடைய ஆதரவுக்கரம் நீட்டுகிறது.

# 28 திருநெல்வேலி மீனவர்கள் அதிகாலையில் விடுவிக்கப்பட்டு, இந்திய தூதரகத்தால் நாடு திரும்பியுள்ளனர்

சென்னை, 19 டிசம்பர் 2024: பஹ்ரைனில் உள்ள இந்தியத் தூதரகத்தின் தலையீட்டைத் தொடர்ந்து, தமிழகத்தின் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள இடிந்தகரை மீனவ கிராமத்தைச் சேர்ந்த 28 மீனவர்கள் வெற்றிகரமாக பஹ்ரைனில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டனர். ஆரம்பத்தில் ஆறு மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட மீனவர்கள், தூதரகத்தின் முயற்சியால், மூன்று மாதங்கள் குறைக்கப்பட்ட தண்டனையால் பயனடைந்தனர்.

எக்ஸ் இல் வளர்ச்சியை அறிவித்த தூதரகம், "பஹ்ரைனில் உள்ள இந்தியத் தூதரகம், சமீபத்தில் விடுதலை செய்யப்பட்ட 28 இந்திய மீனவர்களின் சிறைத்தண்டனையை 6 மாதத்திலிருந்து 3 மாதங்களாகக் குறைத்து மீண்டும் தாயகம் திரும்பியதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது. நிஷீமி இன் இந்திய சமூக நல நிதியின் கீழ் சட்ட உதவி மற்றும் பயணத்தை தூதரகம் எளிதாக்கியது.

வெளிநாட்டில் உள்ள இந்திய பிரஜைகளின் நலனுக்கான தனது அசைக்க முடியாத உறுதிப்பாட்டை தூதரகம் மீண்டும் உறுதிப்படுத்தியது மற்றும் பஹ்ரைன் அதிகாரிகளின் உடனடி ஒத்துழைப்பு மற்றும் தூதரக அணுகலுக்கு நன்றி தெரிவித்தது. மற்றொரு எக்ஸ் இடுகையில், தூதரகம் எழுதியது, "பஹ்ரைன் அதிகாரிகளின் ஒத்துழைப்பு மற்றும் தூதரக அணுகலை வழங்குவது உட்பட விரைவான பதிலுக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம்."

தமிழக முதல்வர் மு.க.வின் கடிதத்தைத் தொடர்ந்து நாடு திரும்புதல். கைது செய்யப்பட்ட மீனவர்களுக்கு தூதரக சேவைகள் மற்றும் சட்டப்பூர்வ ஆதரவை வழங்க விரைந்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கரிடம் ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார். சரியான நேரத்தில் தலையீடு மற்றும் இந்திய தூதரகம் மற்றும் பஹ்ரைன் அதிகாரிகளின் ஒருங்கிணைந்த முயற்சிகள் நிலைமைக்கு சாதகமான தீர்வை உறுதி செய்தன.

# கோவா விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றவர்களின் துணிச்சல், மன உறுதி நினைவு கூரப்படும் :பிரதமர்

சென்னை, 19 டிசம்பர் 2024: கோவா விடுதலை தினத்தை முன்னிட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக பங்கேற்ற பெண்கள் மற்றும் ஆண்களின் அசாத்திய துணிச்சல் மற்றும் மன உறுதியை நினைவு கூர்ந்துள்ளார்.

இது தொடர்பாக சமூக ஊடக எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் பிரதமர் நரேந்திர மோடி கூறியிருப்பதாவது:

இன்று, கோவா விடுதலையான தினம். இத்தினத்தில், விடுதலைக்காக தங்களைத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்ட பெண்கள் மற்றும் ஆண்களின் அசாத்திய துணிச்சலையும் மன உறுதியையும் நினைவு கூர்கிறோம். அவர்களின் வீரம் கோவாவின் முன்னேற்றத்திற்காகவும், மாநில மக்களின் வளமைக்காகவும் தொடர்ந்து பணியாற்ற எங்களுக்கு உத்வேகம் அளிப்பதாக அமைந்துள்ளது.